செ.வெ.எண்.11 நாள்.05.08.2017

தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965–ன் படி அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் (பயிற்சி பள்ளிகள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் உட்பட), நூலகங்கள், சங்கங்கள், திருமண மண்டபங்கள், திரையரங்குகள், விடுதிகள், சத்திரங்கள், ஆஸ்பத்திரிகள், நர்சிங்ஹோம், மருந்தகங்கள், மகப்பேறு மையங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், சமுதாய நலக்கூடங்கள், பொதுக்கூட்டங்கள், விருந்துகள் போன்ற நிகழ்ச்சிகளுக்காக பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிடங்கள், மதரீதியான வழிபாட்டு கூடங்கள், பொழுதுபோக்கு மையங்கள், பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள அனைத்து வகையான கட்டிடங்களும், மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களும் மற்றும் தரைதளம் 100 சதுர மீட்டர் (1074 சதுர அடி) கொண்ட பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ள அனைத்து தனியார் மற்றும் பொது கட்டிடங்களுக்கும் உரிமம் பெற்றிருக்க வேண்டும். இது நாள் வரை உரிமம் பெறவில்லையென்றால், அதற்கான உரிமம் பெற படிவம்–ஏ விண்ணப்பத்துடன் உரிமம் கட்டணம் செலுத்தியதற்கான அசல் செலுத்துச்சீட்டு, அரசு அங்கீகாரம் பெற்ற பொறியாளரிடம் பெறப்பட்ட கட்டிட உறுதித்தன்மைக்கான சான்று படிவம்–பி அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம், தீயணைப்புத்துறை மற்றும் சுகாதாரத்துறையிடம் பெறப்பட்ட சான்று, மின் இணைப்பு பெற்ற ஆணை நகல், உள்ளாட்சி நிர்வாகத்திடம் வரி செலுத்தியதற்கான ரசீது ஆகியன இணைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், கட்டிடம் உரிமம் பெற மத்திய மாநில அரசு அலுவலகங்கள், மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி அலுவலகங்கள் இயங்கும் கட்டிடங்களுக்கு கரூர் வருவாய் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு கரூர் வருவாய் கோட்டாட்சியரிடமும், குளித்தலை வருவாய் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு குளித்தலை வருவாய் கோட்டாட்சியரிடமும் 16.08.2017–க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே கட்டிட உரிமம் பெற்றுள்ளவர்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை தவறாமல் உரிமத்தினை புதுப்பிக்க வேண்டும். உரிமம் பெறாமல் எந்த கட்டிடத்தையும் பொது கட்டிடமாக பயன்படுத்தக்கூடாது. உரிமம் பெறாமலோ, காலாவதியான உரிமத்துடனோ பொதுக்கட்டிடங்கள் செயல்படுவது கண்டறியப்பட்டால் மேற்படி கட்டிடத்தை பயன்படுத்த தடை விதிக்கப்படுவதுடன் கட்டிட உரிமையாளர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.**